**கெபிதிகொல்லாவ பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 யூலை 09 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 10 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிட அலகுகள் 05 இன் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சபைக்குரிய ஆதனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிரதான பேரேட்டில் 10 கணக்குகளில் ரூபா 4,370,044 பெறுமதி அத்திகதியில் பரீட்சை மீதியில் ரூபா | உரிய மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பிட்டுப் பார்த்து சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| | 134,967,037 எனக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 135,247,320 ஆன கூட்டு வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் 03 கணக்கு விடயங்களுக்கு உரிய ரூபா 788,132 ஆன வருமானம் உரிய வருமான ஆவணங் களுக்கு ஏற்ப ரூபா 799,262 ஆக இருந்ததால் ரூபா 153,030 மொத்த வேறுபாடாகக் காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பிட்டுப் பார்த்து சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

**(இ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 132,409,114 பெறுமதியான 12 கணக்கு விடயங்களுக்குரிய சொத்து ஆவணங்கள், விரிவான ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

## 1.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் கோவை | | | |
| | முதலாம் அத்தியாயத்தின் விதி 5.11 | சபைக்குரிய வழியில் காசு மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் தொடர்பாக பாதுகாப்பு காப்புறுதி மேவுகையைப் | உரிய விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் காப்புறுதி மேவுகையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 1645 மற்றும் 1646 | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சகல வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பாக 2015 ஆம் ஆண்டு முதல் ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆண்டு முதல் 03 வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| (இ) | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குரிய வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் சோதனை நடத்தப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 07 வாகனங் களுக்காக பரிசோதனை மேற் கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சிய வாகனங்களுக்காக இவ்வாண்டில் நடாத்தப்பட உள்ளன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 688,371 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,649,539 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,050,000 | 935,700 | 935,700 | - | 925,000 | 832,985 | 832,985 | - |
| (ii) | வாடகை | 6,161,616 | 4,526,687 | 4,722,723 | 30,100 | 7,715,924 | 8,926,673 | 8,926,673 | 226,136 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 780,000 | 684,220 | 684,220 | - | 2,290,000 | 473,020 | 473,020 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 24,302,084 | 21,783,500 | 20,412,460 | 2,646,649 | 17,935,943 | 14,148,149 | 14,148,149 | 1,275,609 |
| | மொத்தம் | 33,293,700 | 27,930,107 | 26,755,103 | 2,676,749 | 28,866,867 | 24,380,827 | 24,380,827 | 1,501,745 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(i) பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வீதவரி பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வீதவரி பிறப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 346,552 ஆகவும், முத்திரைக் கட்டணம் 1,970,687 ஆகவும் காணப்பட்டது. | பெற வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும்,

நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப பிறப்பிக்கப்பட வேண்டிய போதும் 2019 திசெம்பர் 31 வரை குறித்த விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உப விதிகள் பிறப்பித்து பிரதேச சபை சட்டதை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) எதிர்பார்த்த விளைவுகளை (output) பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த கெபிதிகொல்லாவ நீர் வடிகட்டும் நிலைய கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 559,738 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் நீர் வடிகட்டி இயந்திரம் பொருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையால் எதிர்பார்த்த விளைவுகளை (output) பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீர் வடிகட்டி இயந்திரம் பொருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 02 இயந்திரங்கள் கணக்கீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 1,014,989 ஆக இருந்த போதும் அந்த 02 இயந்திரங்கள் வாடகை அடிப்படையில் 580.5 மீற்றர் மணித்தியாலங்கள் வழங்கப்பட்டிருந்தமையால் அறவிடப்பட வேண்டிய | சபையின் சகல நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வாடகை அடிப்படையில் வாகனங்கள் இயந்திரங்களை வழங்குவதற்குரிய நிலுவை வருமானத்தை | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் முறையான வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளேன் |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ரூபா 2,197,542 ஆக இருந்தது. | தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட கெபிதிகொல்லாவ பஸ் நிலையத்தின் 46 கடைகளுன் கூடிய இரண்டு மாடிக் கட்டிட தொகுதியை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | விவைில் குத்தகைக்கு வழங்க அல்லது வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

3.3 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

---------------------------------------

**செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

-----------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 3,938,818 ஆன 12 சொத்து வகைகள் 05 ஆண்டுகளுக்கு மேலாக விளைவற்றுக் காணப்பட்டன. | செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான இலக்கத்தை கண்டுபிடிக்க முடியாத சிதைவடைந்திருந்த டபிள் கெப் வண்டியொன்று திருத்தி பயன்படுத்து வதற்கோ அல்லது கை தவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தி பயன்படுத்தவோ கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதிய் 04/2015 ஆ் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் நேரடியாக பொறுப்பு கூற வேண்டிய உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நாளதுவரையாக மேற்கொள்ளப்பட்டு நிதி நிர்வாக நடவடிக்கைகள் சீராக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்படுத்தல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆம் திகதிய DMA/2009(1)(i) இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |